27.11.2024

S.C.No. 21/2024

PW. 4 Tr. திரு.நாகராஜன்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

நான் சம்பவ இடத்திற்கு 28.08.2023 அன்று இரவு வந்தபோது போலீசார் அங்கு இருந்தார்களா அல்லது நான் அங்கு வந்த பிறகு போலீசார் வந்தார்களா என்றால் நான் வரும்போது போலீசார் அங்கு இருந்தார்கள். நானாக வண்டியை நிறுத்தினேனா அல்லது அவர்கள் வண்டியை நிறுத்தினார்களா என்றால் நான் தான் நிறுத்தி பார்த்தேன். நான் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் 15 நிமிடத்திலிருந்து 1/2 மணி நேரம் இருக்கும். சம்பவ இடத்திலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் 1/2 மணி நேரம் முடிந்தவுடன் கிளம்பினேன். 11.30 மணி இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு வரும்போது மழை பெய்து கொண்டிருந்ததா அல்லது மழை பெய்து முடிந்துவிட்டதா என்றால் மழை முடிந்து விட்டது. என்னுடன் எனது நண்பர் இருந்தாரா என்றால் அவர் எனது நண்பர் இல்லை. நான் கையொப்பம் செய்யும்போது அந்த நபரும் கையொப்பம் செய்தார். எந்த போலீசார் அந்த இரண்டு செருப்பை எடுத்தது என்றால் அது யார் என்று தொியாது. காலரில் ஸ்டார் இருந்தது. என்னை போலீசார் விசாாிக்கும்போது அந்த நபர் யார் என்று எனக்கு தொியாது, அந்த நபரின் விலாசம் எனக்கு தொியாது என்ற விவரத்தை நான் போலீசார்

விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் அது குறித்து ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்ற ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். படித்து பார்த்து முழு சுய நினைவோடுதான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். எனக்கு ஆட்டோ ஓட்டுவதற்கு லைசன்ஸ் இருக்கிறது என்றால் சரிதான். பேட்ஜ் ம் உள்ளது என்றால் சரிதான். நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் B.Com பாதியில் நிறுத்திவிட்டேன். என்னிடம் காட்டப்படும் சம்மனில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 07.06.2024 அன்று நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொன்னபோது அந்த சாட்சியத்தில் ஆங்கிலத்தில்தான் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எப்போதும் ஆங்கிலத்தில்தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரியல்ல. தமிழிலும் போடுவேன். தமிழில் ஒரே மாதிரி போடுவேனா அல்லது மாற்றி மாற்றி போடுவேனா என்றால் ஒரே மாதிரிதான் போடுவேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 3 ஆவணத்தில் உள்ள ஒன்றாவது கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். அதே போலதான் தமிழில் எப்போதும் கையொப்பம் போடுவேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 2 ல் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதா அல்லது அ.சா.ஆ. 3 ல் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதா என்றால் இரண்டுமே என்னுடைய கையொப்பம்தான். அந்த இரண்டு கையொப்பங்களுக்குமிடையே நிறைய வேறுபாடு உள்ளது என்றால் ஆமாம். போட்டதில் வேறுபாடு உள்ளது. தற்போது தமிழில் அ.சா.ஆ. 2 மற்றும் 3 ல் உள்ளவாறு என்னால் கையொப்பம் போடமுடியுமா என்றால் முடியும். நான் வடசேரி

காவல் நிலையத்தின் அருகே ஆட்டோ ஓட்டுவதால், போலீசாருக்கு வேண்டி பார்க்காத சம்பவத்தை பார்த்ததாகவும், நடக்காத சம்பவத்தை நடந்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் போலீஸ் வரவில்லை என்றாலும் போலீசார் சொல்லிக்கொடுத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.